செ.வெ.எண். 154 நாள்: 20.11.2016

# பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், சென்னை தியாகராய நகரில் நடைப்பாதை வளாகம் அமைக்கும் பணிக்கான ஒத்திகை நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை தியாகராய சாலை (பாண்டி பஜார்)யில் நடைபாதை வளாகம் (Pedestrian Plaza) அமைக்கும் பணிக்கான வடிவமைக்கும் பணி நடைபெறுகிறது. இப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு சோதனை முறையில் தியாகராய சாலையில், பாஷ்யம் தெரு (பனகல் பூங்கா) முதல் தணிகாசலம் தெரு சந்திப்பு வரை கீழ்க்கண்ட போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு இன்று ( 20.11.2016) (ஞாயிற்றுக்கிழமை) பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (பணிகள்) திரு. கே.எஸ்.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் முனைவர்.சுபோத் குமார் இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (கல்வி) திரு. கோவிந்தராவ் இ.ஆ.ப., அவர்கள், போக்குவரத்து காவல்துறை துணை ஆணையாளர் திரு.ப.அரவிந்தன் இ.கா.ப., அவர்கள் மேற்பார்வையில் காலை 9 மணி முதல் 12.30 மணி வரை ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்வொத்திகை நிகழ்ச்சியினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.பி.டபிள்யூ.சி. டேவிதார் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. காகர்லா உஷா இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் பார்வையிட்டனர்.

தியாகராய நகரினை மறுசீரமைப்பு மேற்கொள்வதற்காக திருவாளர்கள் JLL கலந்தரியகுறியவர்கள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது தியாகராய நகரில் நடைப்பாதை வளாகம் அமைப்பது ஒரு முக்கிய அம்சமாக அறியப்பட்டது. இப்பணிகள் கடந்த 5 ஆண்டுகளாக நடைப்பெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக நடைப்பாதை வளாகம் அமைத்திட திருவாளர்கள் ஒயாஸிஸ் (Ooasis) கலந்தரியகுறியவர்கள் மூலம் வரைகலை தயார் செய்யப்பட்டது. நடைப்பாதை வளாகம் அமைத்திட உலக வங்கியிடம் நிதி கோரப்பட்டுள்ளது. உலக வங்கியின் ஆலோசனைப்படி போக்குவரத்து மதிப்பீடு ஆய்வு, சமுகவியல் மற்றும் சுற்றுப்புற சூழல் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. ஒட்டு மொத்த ஆய்வுகளை ஒருங்கிணைத்து வரைபடம், மதிப்பீடு மற்றும் ஒப்பங்களுக்காக ஆவணங்களை தயாரிக்க திருவாளர்கள் தாரஷா மூலமாக தற்போது ஆய்வு நடைபெறுகிறது. இப்பணி பொலிவு நகர (Smart City) நிறுவன அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக நடைபாதை வளாகம் அமைப்பதற்கு (20.11.2016) இன்று போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு நடைப்பாதை வளாகம் அமைப்பதற்கான வடிவமைப்பு ஒத்திகை நடைபெற்றது. போக்குவரத்து காவல்துறையினரால் சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டு, எவ்வித வாகன நெரிசலும் ஏற்படாமல் சீரான போக்குவரத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஒத்திகை நிகழ்ச்சியின் போது, முன் மாதிரியாக நடைபாதை வளாக பகுதியில் பொது மக்களை ஊக்கப்படுத்தும் விதமாக உடல் நலம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சியும், மருத்துவ முகாமும், பாரம்பரிய உணவு வகைகள் குறித்த விழிப்புணர்வும், பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்ட பொலிவு நகரம் (Smart City) பற்றிய ஓவியப் போட்டியும், சிறுவர்கள் மற்றும் அனைத்து தர மக்களும் பங்கேற்ற பிற விளையாட்டு போட்டிகளும் நடத்தப்பட்டது.

மேலும், நாட்டுபுற கலை நிகழ்ச்சியான கிராமிய ஒயிலாட்டம் மற்றும் டிரம்ஸ் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது மக்களின் கருத்துகள் கேட்டு பதிவு செய்யப்பட்டது. பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் நடைப்பாதை வளாகம் அமைக்கப்படவுள்ளது.

பொதுமக்கள் நடைபாதை வளாகம் குறித்து வரவேற்பினையும், மகிழ்ச்சியினையும் தெரிவித்தனர். தியாகராயநகர் போன்ற போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்களில் இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் குடும்பத்துடன் இவ்விடத்திற்கு வந்து எவ்வித பயமும் இன்றி பாதுகாப்புடன் பொருட்களை வாங்குவதற்கு வசதி ஏற்படும். தாங்கள் வெளிநாடுகளில் கண்டதை போன்று நமது மாநிலத்தில் ஏற்படுத்தப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். மேலும், அரசு இதனை செயல்படுத்திட வேண்டும் என அனைத்து தரப்பு பொதுமக்களும் தெரிவித்தனர்.

**<u>பாஷ்யம் தெரு (பனகல் பூங்காவிலிருந்து) தியாகராய சாலை ( பாண்டி பஜார்) வழியாக அண்ணா சாலைக்கு செல்லும் வாகனங்கள்</u>**

- **பேருந்துகள்** மற்றும் **இரு சக்கர வாகனங்கள்** மட்டும் இச்சாலையில் **வழக்கம் போல் சென்று வர அனுமதிக்கப்பட்டது.**
- கார், ஆட்டோ ரிக்ஷா, வேன், ஷேர் ஆட்டோ மற்றும் கனரக வாகனங்கள் மாற்றுப் பாதையாக G.N.செட்டி சாலை, டாக்டர் நாயர் சாலை வழியாக அண்ணா சாலைக்கு செல்ல மாற்று பாதையில் அனுமதிக்கப்பட்டது.

**<u>அண்ணா சாலையிலிருந்து தியாகராய சாலை (பாண்டி பஜார்) வழியாக பாஷ்யம் தெரு செல்லும் வாகனங்கள்:</u>**

- பேருந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் மட்டும் இச்சாலையில் வழக்கம் போல் சென்று வர அனுமதிக்கப்பட்டது.
- கார், ஆட்டோ ரிக்ஷா, வேன், ஷேர் ஆட்டோ மற்றும் கனரக வாகனங்கள் மாற்றுப் பாதையாக தணிக்காச்சலம் தெருவிலிருந்து வெங்கடநாராயணா சாலை வழியாக பாஷ்யம் தெருவிற்கு அனுமதிக்கப்பட்டது.
- G.N.செட்டி தெரு மற்றும் வெங்கடநாராயணா சாலை வழியாக தியாகராய சாலையை கடக்கும் உட்புற சாலைகளான இராஜ மன்னார் தெரு, கமலாபாய் தெரு, முத்துக்கிருஷ்ணன் தெரு, நானா தெரு, சிவஞானம் தெரு, தீனதாயளு தெரு, சுந்தரம் தெரு, சிவப்பிரகாசம் தெரு, கண்ணதாசன் தெரு, பகவந்தம் தெரு, மற்றும் ராஜா தெரு ஆகியவற்றின் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.
- மேற்கண்ட பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் வாகனங்கள் மட்டும் உட்புற சாலைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

**<u>வாகனங்கள் நிறுத்துமிடம் (Alternate Parking Plan):</u>**

பாஷ்யம் தெருவிலிருந்து தியாகராய சாலை செல்லும் கார்களை பனகல் பூங்காவின் முன் உள்ள வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்திட அனுமதிக்கப்பட்டது.

- அண்ணா சாலையிலிருந்து தியாகராய சாலை செல்லும் கார்கள் அண்ணா சாலை மற்றும் தணிகாச்சலம் சாலை சந்திப்பு வரை உள்ள இடங்களின் இருபுறமும் நிறுத்திட அனுமதிக்கப்பட்டது.
- **<u>இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம்:</u>**
- பிரகாசம் சாலை, கோமதி நாராயணன் சாலை (G. N Chetty Road) வழியாக தியாகராய நகருக்கு வரும் வாகனங்கள் பிரகாசம் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி மைதானத்திலும், அண்ணாசாலை, தணிகாச்சலம் சாலை, டாக்டர் நாயர் சாலை வழியாக தியாகராய நகருக்கு வரும் வாகனங்கள் பல்லடுக்கு (Multi Level Parking) வாகனம் நிறுத்துமிடம் (இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் எதிரில்) அமையவுள்ள காலியிடத்திலும் போக் சாலை, டாக்டர் நாயர் சாலைக்கு இடையில் உள்ள தியாகராய சாலையோர வாகனம் நிறுத்துமிடத்தில் இருசரக்கரவாகனங்கள் நிறுத்திட அனுமதிக்கப்பட்டது.

**<u>பேட்டரி கார்:</u>**

- வயதானவர்கள், குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தியாகராய நகர் நடைபாதை வளாகத்தில் அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு பேட்டரி கார் மூலம் சிரமமின்றி சென்று வந்தனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**